# திக்கெட்டும் உன் முரசொலி!

## (முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாள் – கவிதை)



பிறக்கும் போதே
தமிழருக்கு
வெளிச்சமாக
பிறந்தவன் -நீ !

பெரியாரைஅண்ணா வை
தாங்கிய உடல் - நீ !
சாதியைச்சாய்த்த
சமத்துவ திடல்- நீ !

பெட்டியில்உறங்கிறாய்
ஆனால் உரசினால்
எரியும் தீக்குச்சி- நீ !

இனம் விழிக்க
விழித்த நிலா- நீ !
கொள்கைச் சிறக்க
உழைத்தச் சூரியன் - நீ !

மாணவர்கள்
மாறுகிறார்கள்
ஆனால் பாடம் - நீ
கல்லூரி - நீ !

எழுதும் போதும்
நிமிர்ந்தே நிற்கும்
எழுதுகோல் - நீ !

உன் போராட்டங்கள்
மெரினா
மணல் வெளி !

உன் புகழ்
நட்சத்திரம்
குவித்துவைத்த
வான் வெளி !

சட்டமன்றத்தில்
அய்யா கலைஞர் - நாதம் !
உதயநிதி ஸ்டாலின்
சங்கநாதம் !

தலைவர்
மு.க.ஸ்டாலின்
எங்கள் வீட்டில்விளக்கு !

எண்களில்
தலைவர்
மு.க.ஸ்டாலினும்
கலைஞரும்
சமமான கணக்கு !

தீயிக்குள்
கதறும் போது
ஓடி வரும் - நீ
தீயணைப்பு வண்டி !

ஆதிக்க இந்தி
எழுத்தை அழிக்கும்
நீ- தார் வண்டி !

அண்ணா நினைவிடம்
அருகே
நினைவிடம்
அமைத்த்
தலைவா !

உன் சிரிப்பு
பூக்களுக்கே
வெக்கத்தைத் தரும் அல்லவா !

அன்பைக்கொட்டிய
தலைவா
தொண்டன் அன்பை அள்ள-
வா !

பத்திரிகையாளர்
காத்திருக்கிறார்கள்
ஒரு பேட்டி
சொல்ல-வா !

உடல் எரியும்
உன் மொழிப்போர் வரலாறு
சொல்லவா !

முடி
திருத்தகங்களில்
நாட்டின்
முடி
தீர்மானித்தவன்-நீ !

ஏழைத்தமிழர்
குடிசைக்குள்
ஓலைச்சுவடி
தமிழைப்
படிக்க வைத்தவன்- நீ !

பாய்ச்சல் புலிகள்
பணிந்து நிற்கும்
தாய்ப்புலி- நீ !

வெண் நாரை
சிறகுகளில்
உடையணிந்த
வெண் மேகம்- நீ !

கல்லக்குடியில்
வெடித்தக்குண்டுகளை
வெத்துக் குண்டுகளாக்கிய-
வீரம் - நீ !

பேசப்பேச
தோள் துண்டை
இழுத்துவிடுவது - உன் தனி
பாணி !

திரை உலகம்
அரசியல் உலகம்
அனைத்திலும்
நீ- ஞானி !

இறந்தவனும்
வாழுவான்
உன் இரங்கல் கவிதை
அப்படி !

அரசியலில்
தண்ணீர் காட்டுவாய் !
சிலருக்கு
தண்ணீக் காட்டுவாய்
எப்படி !

மை- தீக்கொட்டும்
உன் முரசொலி ! தில்லி
நடுங்கும்
உன் பறை ஒலி !

உன்னிடம்தோற்றது
ஆயுதப் போர் !
நீ நடத்தியது
காகிதப் போர் !

உன் கரிகாலன்
கேள்வி பதில்
தூண்டில் போடும் !

உன் ஆண்டியும்
போண்டியும்
சமூக அவலத்தை
தூக்கில் போடும் !

நீ விரல்களை அசைத்தால்
கொடி ஓங்கும் !
நீ விழிகளை அசைத்தால்
வீணை ஏங்கும் !

உன் கல்லறை மீது விழும்
மழை
கவிதையாகிறது !

உன் சிலையைத் தொடும்
காற்று
கவிஞனாகிறது !

கருப்புக் கண்ணாடி
மஞ்சள் சால்வை-உன்
அடையாளமாகிறது !

தமிழைத் தேரில்
அழைத்துவந்தோம்
அதைச் சாக்கரநாற்காலி
என்றார்கள் !

கர்ஜனைகள்
ஓய்வதில்லை என்றார்கள் !
அது
உன் குரல் என்றார்கள் !

நொடிக்கொரு
பேரலையைக்
கடந்தது உன் படகு !

சிறைச்சாலை
அடக்குமுறை
அனைத்தும்
உன் காலில் அடகு !

துப்பாக்கி மிரட்டினால்
முன்னேறுவாய்- நீ
நூறு மடங்கு !

குடும்பம் குடும்பமாக
மாநாட்டில் கூடுவோம் உன்
பேச்சைக் கேட்க !

குடும்பம் குடும்பமாக
சிறைச்சாலைச் செல்வோம்
உன் பேச்சைக் காக்க !

ஓநாய்கள் ஆட்டத்தை
ஒரே அறிக்கையில்
கதை முடித்தவனே !

காவேரி மருத்துவமனையில்
கடைசி மூச்சை
முடித்தவனே !

நவீன தமிழ் நாட்டின் சிற்பி- நீ
ஒவ்வொரு தமிழரோடும்
வாழ்வாய் - நீ !



ஈரோடு இறைவன்
இணைச் செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி

---

**மேகதாது அணை கட்டும் முன்னெடுப்பு:**

# தமிழ்நாட்டைப் பாலைவனமாக்கும் ஆபத்து!

## கி.வீரமணி தலைமையில் இன்று திருவாரூரில் ஆர்ப்பாட்டம்!

சென்னை, மே.31-

திராவிடர் கழகத் துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

மேகதாது அணை கட்டும் முன்னெடுப்பு தமிழ்நாட்டைப் பாலைவனமாக்கும் ஆபத்து எனவும், பிரச்சினையை வளர விட்டுத் தீர்க்க முடியாது! உச்ச நீதிமன்றம் உரிய அக்கறை காட்டியிருக்க வேண்டும் என்றும், இது அரசியல் பிரச்சினையல்ல; தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை!

கருநாடகாவின் பிடிவாதத்தையும், ஒன்றிய அரசு, உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் மெத்தனப் போக்கையும் கண்டித்து திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் தலைமையில் இன்று (31.5.2026) காலை 9 மணிக்கு திருவாரூரில் மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு திராவிடர் கழகத் துணைத் தலைவர் கலி. பூங்குன்றன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

**சட்டம் ஒழுங்கை வலுப்படுத்தி பெண்கள் – குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்து**

# நிரந்தரமான தீர்வுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## த.வெ.க. அரசுக்கு – தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா வலியுறுத்தல்!

சென்னை, மே 31

“தமிழக முதல்வர் கவனம் செலுத்தி, சட்டம் ஒழுங்கை வலுப்படுத்தி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிரந்தரமான தீர்வுகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

“தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் பொது மக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றன.

சென்னையில் 16 வயது சிறுவனுக்கு மது கொடுத்து பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக வடபழனி காவல் நிலைய தலைமைக் காவலர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ளவரே இத்தகைய குற்றச் செயலில் ஈடுபட்டதாக வெளியாகியுள்ள தகவல் மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல், சென்னை வேளச்சேரி பேருந்து நிலையம் அருகே 61 வயது மூதாட்டி ஒருவர் காயங்களுடன் மயக்க நிலையில் கிடந்துள்ளார். அந்த மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். வயது முதிர்ந்த பெண்கள்கூட பாதுகாப்பாக வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி, 62 வயது முதியவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் மனிதநேயத்தை தலைகுனியச் செய்துள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை இந்தச் சம்பவம் மீண்டும் எழுப்பியுள்ளது.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நடைபெற்ற திருமண வீட்டில் முகமூடி அணிந்த கும்பல் ஒன்று புகுந்து அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டிய சம்பவம் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா, த.வெ.க. அரசை வலியுறுத்தியுள்ளார்.

---

**ஆர்.கே.நகர் மேற்கு பகுதி**

# 38வது வட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் நேதாஜி யு.கணேசன் அறிக்கை!

சென்னை, மே.31

கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் முன்னாள் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர், பகுதி கழக செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், ஆகியோர் ஆலோசனைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் ஆலோசனைக் கூட்டம் இன்று (31.05.2026. ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் வட்டக் கழக அவை தலைவர் கே. சி.ராஜா தலைமையில் கதவு.எண்.89 நேதாஜி நகர் 3வது தெரு தண்டையார் பேட்டை சென்னை 81ல் நடைபெறுகிறது.

எனவே 38வது வட்ட கழகத்தைச் சார்ந்த மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், வட்ட அமைப்பாளர்கள், பாக முகவர்கள், மன்ற நிர்வாகிகள், கழகத் தோழர்கள் செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளதால் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு வட்டச்செயலாளர், மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

**முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா:**

# 156வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ஜெ.செல்வேந்திரன் வேண்டுகோள்!

சென்னை, மே.31-

156வது வட்டச் செயலாளர் ஜெ.செல்வேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரும் ஜூன்-3ல் பிறந்த நாள் விழா காணும் தமிழ் நாட்டின் சிற்பி தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு 156வது வட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (31-05-2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியாளவில் மதனாந்தபுரம் மாதா நகரில் உள்ள அஞ்சனை மஹா லில் நடைபெற உள்ளது.

எனவே 156வது வட்டத்துக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் ஜெ.செல்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

---

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (31.05.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி எண்.7, செல்லப்பா தெருவில் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

**பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---





பல்லாவரம் வடக்கு மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழகச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பெர்னார்ட் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்போடும் எழுச்சியோடு கொண்டாடுவது குறித்து சிறப்புரை ஆற்றினார். மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, பம்மல் வடக்குப் பகுதி கழகச் செயலாளர் த.ஜெயக்குமார், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், பகுதி கழக அவைத் தலைவர்கள் வை.த.ரா. மூர்த்தி, இரா.சேகர் ஆகியோர் உடன் இருந்தனர்.